**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகியோரின் ஈமச்சடங்கிற்காக வழங்கப்படும் மானியத்தொகை ரூ.2,500/–ஐ பெறுவதற்கான இறந்தவரின் குடும்ப ஆண்டு வருமான வரம்பு கிராமப்புறங்களில் ரூ.40,000/– ஆகவும், நகர்ப்புறங்களில் ரூ.60,000/– ஆகவும் நிர்ணயித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(கொடுதடு(2))துறை

அரசாணை (நிலை) எண்:71 நாள்: 12.07.2012

ஆனி 28 திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.144, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(கொடுதடு) துறை, நாள் 06.08.1999
2. அரசாணை (நிலை) எண்.92, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(கொடுதடு) துறை, நாள் 27.07.2010
3. ஆதி திராவிடர் நல ஆணையரின் கடித ந.க.எண். ஆ1/11411/2010, நாள் 20.08.2010 மற்றும் 01.03.2012

–––––

**ஆணை:–**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் எவரேனும் இறந்தால் அன்னாரின் ஈமச்சடங்கிற்காக ரூ.500/– அக்குடும்பத்தாருக்கு உதவித்தொகை வழங்க ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்படி உதவித்தொகை ரூ.500/–லிருந்து ரூ.2,500/– (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) ஆக உயர்த்தப்பட்டும் இச்செலவினத்திற்கு தேவையான கூடுதல் தொகை ரூ.2,00,00,000/– (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில் ஈமச்சடங்கிற்காக வழங்கப்படும் உதவித் தொகையை பெறுவதற்கான இறந்தவரின் குடும்ப ஆண்டு வருமானம் குறித்து மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஏதும் குறிப்பிடப்படவில்லை எனவும் எனவே அரசாணை (நிலை) எண்.31, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 28.02.2011–ல் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற ஆண்டு வருமான உச்சவரம்பு கிராமப்புறங்களில் ரூ.40,000/–ஆகவும், நகர்ப்புறங்களில் ரூ.60,000/–ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது போல் ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை பெற குடும்ப வருமானம் நிர்ணயம் செய்யலாம் எனவும் ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்கள் தெரிவித்தார். மேலும் வருமான வரம்பினை உயர்த்தும் பட்சத்தில் மானியத் தொகை ரூ.2,500/–ஆக ஏற்கனவே உயர்த்தப்பட்டுள்ளதால் எதிர்பார்க்கும் கூடுதல் செலவினமாக ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு தேவைப்படும் எனவும்,

எனவே 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்திற்கு ரூ.500.00 இலட்சத்திற்குப் பதிலாக ரூ.600.00 இலட்சம் வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு பரிசீலித்து, ஆதிதிராவிடர் நல ஆணையரின் பரிந்துரையை ஏற்று 2012–2013–ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகியோரின் ஈமச்சடங்கிற்காக வழங்கப்படும் மானியத்தொகை ரூ.2,500/–ஐ பெறுவதற்கான இறந்தவரின் குடும்ப ஆண்டு வருமான வரம்பு கிராமப்புறங்களில் ரூ.40,000/– எனவும், நகர்ப்புறங்களில் ரூ.60,000/– எனவும் நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 01–ஆதிதிராவிடர் நலன்– 800 ஏனைய செலவு –I திட்டத்தில் சேராதது –BI ஈமச்சடங்குகளுக்குத் தொகை கொடுத்தல்– 09 உதவித்தொகை–03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
> (து.தொ.கு.எண்.2225–01–800– BI -09350)

6. மேலும், 2012 –2013–ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு மேல் தேவைப்படும் கூடுதல் தொகையினை 2012–2013–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்திய நிதி ஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்ய தனியே கருத்துருவினை உரிய காலத்தில் அரசிற்கு அனுப்புமாறு ஆணையர், ஆதிதிராவிடர் நலன் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.39246/12, நாள் 10.07.2012–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.சு.ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
ஆதிதிராவிடர் நல ஆணையர், சென்னை–5
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை–5
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
மாநில கணக்காய்வுத்தலைவர், சென்னை–18/35
நகல்:–நிதித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,சென்னை–9
நிதி (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) ( வரவு செலவு பொது–II துறை), சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல(ஆதிந8)த்துறை, சென்னை–9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் தனி செயலர், சென்னை–9

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்